பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 02 வியாழக்கிழமை 17.07.2020 கதிர் 121

# மனித உரிமை விடயத்தில் இலங்கை நிலை மோசம்!

## பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் கவலை



**லண்டன், ஜூலை 18**

**இலங்கையில் மனித உரிமைகள் விடயத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் டொமினிக் ரப் கவலை வெளியிட்டுள்ளார்.**

**பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் டொமினிக் ரப், மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக இவ்வாறு கூறியுள்ளார்.**

2



## ஹெரோயினுடன் ஒருவர் கைதானார்

யாழ்ப்பாணம், ஜூலை 17

ஒட்டோவில் மறைத்துக் கொண்டு செல்லப்பட்ட சுமார் ஒரு லட்சத்து எண்பதாயிரம் ரூபா பெறுமதியான 15 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் சாவகச்சேரி மதுவரி உத்தியோகத்தர்களால் கைப் பற்றப்பட்டது.

சாவகச்சேரி நகரப்பகுதி ஊடாக ஒட்டோவில் கடத்திச் செல்லப்பட்ட வேளையில் மது வரி அலுவலர்கள் போதைப் பொருளைக்

2

## ஆசனங்களுக்கு மேலதிகமாக பஸ்ஸில் பயணிகள் ஏற்ற தடை

கொழும்பு, ஜூலை 18

பஸ்களில் ஆசன எண்ணிக்கைக்கு மேலதிகமாகப் பயணிகளை ஏற்றிச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரித்துள்ளார்.

ஆசனங்களின் எண்ணிக்கையை விட அதிகளவிலான பயணிகளை ஏற்றிச் செல்வதைத் தவிர்க்குமாறு பஸ் உரிமையாளர்களுக்கும், நடத்துநர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், இவற்றைக் கருத்திற் கொள்ளாமல் சில

2

## இராணுவ வைத்தியசாலை இரணைமடுவில் திறப்பு



கிளிநொச்சி, ஜூலை 18

கிளிநொச்சி இரணைமடுப் பகுதியில் இராணுவ ஆதார வைத்தியசாலையை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா இன்று திறந்து வைத்தார்.

இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா இன்று கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டார். முற்பகல் 11 மணிக்கு

2

## மணல் லைசென்ஸ் முறையை தொடர நீதிமன்றம் உத்தரவு!

மணல் போக்குவரத்துத் தொடர்பில் உள்ள அனுமதிப் பத்திர முறையை ரத்துச் செய்ய அமைச்சரவை முடிவு செய்துள்ள போதிலும், அதையும் மீறி அந்த அனுமதிப் பத்திர விதி முறைகளைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துமாறு பதில் பொலிஸ்மா அதிபருக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

சட்டவிரோமாக மணல் ஏற்றி இறக்குவதில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றினால் பதில் பொலிஸ்மா அதிபருக்கு இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மணல் போக்குவரத்து தொடர்பில்

2

## பொதுத்தேர்தல் பிரசாரத்துக்கான சுகாதார ஒழுங்குவிதிகள்: சட்டமா அதிபர் அனுமதி

கொழும்பு, ஜூலை 17

கொரோனா வைரஸின் தாக்கத்தையடுத்து தேர்தல் அலுவலகங்கள், கூட்டங்கள், பிரசார நடவடிக்கைகள் தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட பொதுத் தேர்தலுக்கான ஒழுங்கு விதிகளுக்கு சட்டமா அதிபர் அனுமதி வழங்கியுள்ளார்.

இந்தத் தகவலை சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரியான அரச சட்டத்தரணி நிஷாரா ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

## தேர்தல் கடமைகளுக்கு யாழில் 795 வாகனங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ். மாவட்டத்தில் தேர்தல் கடமைகளுக்காக 795 வாகனங்கள் போக்குவரத்துப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளன என யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகத் தகவல்கள் தெரிவித்தன.

இதற்கென யாழ். மாவட்டத்திலுள்ள அரசதிணைக்களங்களுக்குச் சொந்தமான 145 வாகனங்களும், இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான 53 பஸ்கள், 120 தனியார் மினி பஸ்கள் உள்ளடங்கலாக மொத்தம் 795 வாகனங்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

2




## பதவி விலகினார் கலாநிதி குருபரன்

யாழ்ப்பாணம், ஜூலை 17

கலாநிதி குமாரவடிவேல் குருபரன் யாழ். பல்கலைக்கழகத்தின் சட்ட முதுநிலை விரிவுரையாளர் பதவியில் இருந்து விலகுவதற்கான இராஜினாமாக் கடிதத்தை இன்று வெள்ளிக்கிழமை பல்கலைக்கழகத்தின் தகுதி வாய்ந்த அதிகாரிக்கு, கலைப் பீடாதிபதி மற்றும் சட்டத்துறைத் தலைவர் ஊடாக அனுப்பி வைத்திருக்கிறார்.

தான் பதவி விலகுவதற்கான

2

## கே.கே.எஸ். - கல்கிஸை ரயில் சேவை இரத்து

கொழும்பு, ஜூலை 17

கல்கிஸை - காங்கேசன்துறை இடையேயான குளிரூட்டப்பட்ட நகர்சேர் ரயில் சேவை இந்த வாரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

கொரோனா தொற்றுநோய் காரணமாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட பல ரயில் சேவைகளை மீண்டும் தொடங்க ரயில்வே திணைக்களம் முடிவு செய்தது.

அதனடிப்படையில் காங்கேசந்துறை - கோட்டை இடையிலான குளிரூட்டப்பட்ட நகர்சேர் ரயில் நாளையும், நாளை மறுதினமும்,

2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் - The Distinctive Voice of The Tamil Speaking People

# இனவாதிகள் என சஜித் அணியை விமர்சிக்க ரணில் அணியினருக்கு வெட்கம் இல்லையா?

## யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் கணேஸ்வரன் கேள்விக்கணை

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் வேட்பாளர்களாக இனவாதிகள் இருக்கின்றார்கள் என்று ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியினர் கருத்து வெளியிட்டு வருகின்றனர். பொதுத்தேர்தல் தோல்விப் பயத்தில் அவர்கள் இப்படிப் பொய்யுரைப்பது வெட்கமில்லையா?

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர் கணேஸ்வரன் வேலாயுதம் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சஜித்தின் கட்சியில் இனவாதிகள் இருக்கின்றார்கள் எனவும், சிறுபான்மை இனத்தவர்கள் இல்லை எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். சிறுபான்மை இனத் தலைவர்களினாலேயே சஜித் தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தி உருவாக்கப்பட்டது என்பது அவருக்குத் தெரியாதா?

ரவி உள்ளிட்ட ஐ.தே.கவில் தற்போது உள்ளவர்களின் ஊழல், மோசடிகளினாலேயே அக்கட்சி இன்று முகவரி இழந்து நிற்கின்றது. திருடர்கள் எமது கட்சியை விமர்சிக்க எந்த அருகதையும் இல்லை.

இந்தப் பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி அமோக வெற்றியடையும். ஐக்கிய தேசியக் கட்சி படுதோல்வியடையும். ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தேர்தலின் பின்னர் பிச்சைதான் எடுக்கும்.

சஜித் தலைமையில் பலமான புதிய அரசு உருவாகும். மூவின மக்களின் பிரச்சினைகளையும் எமது புதிய அரசு தீர்த்துவைக்கும். இது உறுதி - என்றார்.



# இந்தியாவிலிருந்து வரக் கூடிய ஈழ அகதிகள் குறித்துக் கவனம்

## கடற்படையினருக்கு அறிவுறுத்தல்

இந்தியாவில் கொரோனா அச்சம் அதிகமாக காணப்படுவதனால் தமிழகத்தில் இருந்து இலங்கைக்குள் ஊடுருவும் ஈழ அகதிகளின்வருகைதொடர்பில்கடற்படையினர் விழிப்பாக இருக்க வேண்டும் என மன்னார் மாவட்டச் செயலாளர் மோகன் ராஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாவட்டத்தின் கொரோனா தடுப்பு முன் எச்சரிக்கை கூட்டம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற போதே மேற்படி கருத்தினை மாவட்டச் செயலாளர் தெரிவித்தார். இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட பொலிஸ், சுகாதார வைத்திய அதிகாரிகள், மாவட்ட மற்றும் பிரதேச செயலக அதிகாரிகளுடன் கடற்படையினரும் கலந்து கொண்டனர். இதன்போதே கடற்படையினரிடம் மாவட்டச் செயலாளர் மேற்படி கோரிக்கையினை விடுத்தார்.

# போதைப்பொருள் வர்த்தகர்கள் 324 பேர் கைது

போதைப்பொருள் வர்த்தகர்கள் 324 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நேற்று காலை 6 மணிமுதல் இன்று காலை 5 மணி வரை மேல் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் ஊடாக அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஹெரோயின் போதைப்பொருள் வர்த்தகர்கள் 138 பேரும் கஞ்சா, சட்டவிரோத மதுபானம், கோடா மற்றும் ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த 175 பேரும் உள்ளடங்குகின்றனர். ஏனைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் 11 பேர் கைதுசெய்யப்பட்டனர். மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிபொலிஸ் மா அதிபர் தேசப்பந்து தென்னகோனின் ஆலோசனைக்கு அமைய சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

## ஆசனங்களுக்கு .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனியார் பஸ்கள் தொடர்ந்தும் அதிகளவிலான பயணிகளை ஏற்றிச் செல்வதாக முறையிடப்படுகிறது.

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்காக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை முழுமையாகப் பின்பற்றுமாறு இவர்களுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதனை மீறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டார்.

## ஹெரோயினுடன் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பற்றியதுடன் ஓட்டோவில் சென்ற நபரையும் கைது செய்தனர்.

மதுவரி அலுவலர்கள் ஏ-9 வீதி ஊடாக வந்த ஓட்டோவை மறித்து சோதனையிட்டபோது மறைத்து வைக்கப்பட்டிருந்த போதைப் பொருள் சிக்கியது.

## மனித உரிமை ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அறிக்கையில் டொமினிக் ரப் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது மிகவும் மந்தகதியிலேயே இடம்பெற்று வருகின்றது.

மேலும் முக்கிய பொறுப்புக்களுக்குச் சர்ச்சைக்குரிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளமையானது, மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான அரசின் அர்ப்பணிப்பு தொடர்பாகக் கேள்விகளை எழுப்பியுள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டு இறுதியில் இருந்து சிவில் சமூகத்தினர் மற்றும் மனித உரிமைப் பாதுகாவலர்கள் கண்காணிக்கப்படுவதும் அச்சுறுத்தப்படுவதும் அதிகரித்துள்ளன எனத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதேவேளை அரசமைப்புச் சீர்திருத்தம் மற்றும் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குதல் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் பலவற்றில் முன்னேற்றம் அவசியம் - என்று கூறியுள்ளார்.

## தேர்தல் கடமை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் 3 ஆம் திகதி திணைக்களங்களிலிருந்து பெறப்படும் வாகனங்கள் அனைத்தும் பொறுப்பேற்கப்பட்டு மீடும் 6 ஆம் திகதி காலை மீளத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளன. பஸ்கள் அனைத்தும் 3ஆம் திகதி பொறுப்பேற்கப்பட்டு வாக்களிப்பு தினத்தன்று மாலை மீள ஒப்படைக்கப்படவுள்ளன.

தற்போது தேர்தல் பணிகளில் ஈடுபடுவதற்கென திணைக்களங்களுக்குச் சொந்தமான 25 வாகனங்கள் யாழ். மாவட்ட தேர்தல் திணைக்களத்தினால் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ராணுவ வைத்திய .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரணைமடு படைத் தலைமையகத்தில் இராணுவத்தினருக்கான ஆதார வைத்தியசாலையை அவர் திறந்து வைத்தார்.

இந்த திறப்பு விழாவில் மேஜர் ஜெனரல் குணரத்ன, கிளிநொச்சி மாவட்ட சுகாதார பணிப்பாளர் சரவணபவன், கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர் ராகுலன், இராணுவ உயரதிகாரிகள் என பலர் கலந்துகொண்டனர்.

## மணல் லைசென்ஸ் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள அனுமதிப்பத்திர முறையை ரத்துச் செய்ய கடந்த தினம் அமைச்சரவையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை வலுவிழக்கச் செய்யும் ரிட் கட்டளையொன்றை வெளியிடுமாறு கோரி சுற்றுச்சூழல் நீதி மையத்தினால் தாக்கல் செய்யப்பட்ட மனு இன்று மன்றில் பரிசீலனை செய்யப்பட்டது.

அதன்படி, மேன்முறையீட்டு நீதிமன்றின் தலைமை நீதிபதி ஏ.எச்.எம்.டீ. நவாஸ் மற்றும் சோஹித ராஜகருணா ஆகிய நீதியரசர்கள் குழாமினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த மனு மீதான பரிசீலனை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## கே.கே.எஸ். – ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் 20 திகதியும் அதிகாலை 5:10 மணிக்கு கல்கிசையிலிருந்து புறப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதேபோன்று காங்கேசன்துறையிலிருந்து பிற்பகல் 1:15 மணிக்கு கல்கிசை நோக்கிப் புறப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் ஆசனங்களை முன் பதிவுசெய்தவர்களுக்கானகொடுப்பனவு மீளச் செலுத்தப்படும் என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

## பதவி விலகினார் கலாநிதி ..........................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாக பல்கலைக்கழக பேரவை தன்னை சட்டத் தொழிலில் ஈடுபடுவதில் இருந்து தடை செய்துள்ளமையைக் காட்டியுள்ளார்.

தன்னால் உயர் நீதிமன்றில் தொடரப்பட்டிருக்கும் வழக்கு பல்வேறு காரணங்களுக்காக விவாதத்திற்கு எடுக்கப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுக் கொண்டிருக்கத் தான் இவ்விடயத்தில் இனியும் காத்திருப்பதில் பிரயோசனம் இல்லை என்றும், தொடர்ந்து தனது வாழ்வில் நிச்சயத்தன்மை இல்லாதிருக்கத் தான் அனுமதிக்கப் போவதில்லை என்றும், தனது இராஜினாமாக் கடிதத்தில் கலாநிதி குருபரன் குறிப்பிட்டுள்ளார்.

நடைமுறை அனுபவம் இல்லாத ஓர் சட்ட ஆசிரியராகத் தான் கடமையாற்றுவது இயலாத விடயமென்றும் தனது சட்டத் தொழில் மூலம் தான் செய்து வந்த சமூக பங்களிப்பும் ஊடாட்டமும் தனது ஆசிரியப் பணியில் இணைபிரியா அங்கம் என்றும், அது இல்லாத சட்ட ஆசிரியர் பணியில் தனக்கு ஈடுபடுவது திருப்தியை தர மாட்டாது என்றும் கலாநிதி குருபரன் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சட்டத் தொழிலில் ஈடுபடுவது கூடிய வருமானத்தை தரும் என்ற காரணத்திற்காகத் தான் இந்த முடிவை எடுக்கவில்லை என்றும், அவ்வாறாக எடுப்பதாயின் தான் அதனை 2010 யிலேயே அந்த முடிவை எடுத்திருந்துப்பேன் என்றும், வகுப்பறையில் மட்டும் முடங்கியிருக்கும் ஆசிரியராகக் கடமையாற்றத் தான் தயாரில்லை என்றும் குருபரன் தனது கடிதத்தில் மேலும் குறிப்பிடுகிறார்.

தன் மீது விதிக்கப்பட்ட தடை பல்கலைக் கழகம் சுயாதீனத்தை முழுவதுமாக இழந்துவிட்டதுக்கான முக்கியமான சான்று என்றும், தனது நலன்கள் தொடர்பில் சுயமாக முடிவு எடுக்க முடியாத பல்கலைக்கழகம் யாருக்காக செயற்படுகின்றது என்ற கேள்வியையும் எழுப்பியிருக்கிறார்.

நல்லாட்சி, சட்டத்தின் பாலான ஆளுகை, சுயாதீனம் ஆகியவற்றை தொலைத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நல்லாசிரியர்களை ஈர்க்கவும் முடியாமல் தொடர்ந்து வைத்திருக்கவும் முடியாமல் நலிவடைந்து கொண்டிருப்பதாக கலாநிதி குருபரன் தனது கடிதத்தில் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

சட்டக் கல்வி மீதான தனது ஆர்வத்தை ஒரு போதும் கைவிடப் போவதில்லை எனத் தனது கடிதத்தில் கூறும் குருபரன், உயர் நீதிமன்ற வழக்கை தொடர்ந்து கொண்டு நடத்தப் போவதாகவும் தனக்கு சார்பாக கட்டளை ஆக்கும்பட்சத்தில் மீள யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் உள்நுழைய விண்ணப்பிப்பேன் என்றும் தெரிவித்துள்ளார்.

இடைப்பட்ட காலத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறையின் இடைவிடா இயங்குகைக்கு தேவையான, இயலுமான ஒத்தாசைகளைத் தான் வழங்குவார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தமிழர்களுக்கு மறுக்கப்பட்ட நீதி

உலகளாவிய ரீதியில் இன்று ஒரு மிக முக்கியமான தினம்.

நீதிக்கான சர்வதேச தினம் இன்றாகும். ஒவ்வொரு வருடமும் ஜூலை 17 ஆம் திகதி இது அனுஷ்டிக்கப்படுகின்றது.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களின் அவலத்தை வெளிப்படுத்தி நிற்கும் ஒரு முக்கிய குறியீட்டு நாள் இது.

சர்வதேச ரீதியில் நீதியை நிலைநாட்டி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு அதைப் பெற்றுக் கொடுப்பதை உறுதிப்படுத்த வேண்டிய தன் அவசியத்தை இத்தினம் வலியுறுத்தி நிற்கின்றது.

பொதுவாக நீதி குறித்துப் பேசப்பட்டாலும், இத்தினம் நீதித் துறையில் ஒரு முக்கியமான அம்சத்தை ஒட்டி எழுந்தது என்பதும் -

அது, விசேடமாக ஈழத் தமிழர்களுக்கு முக்கியமானது என்பதும் -

நாம் இங்கு அவதானிக்க வேண்டிய விடயங்களாகும்.

சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தை அமைக்க வழி செய்த ரோம் பட்டயம் அங்கீகரிக்கப்பட்டது 1998 ஜூலை 17 ஆம் திகதியாகும். அதை ஒட்டியே இத்தினம் சர்வதேச நீதி தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

தண்டனை விலக்களிப்புக்கு எதிரான போராட்டத்தையும் -

யுத்தக் குற்றங்கள், மனி குலத்துக்கு எதிரான குற்றங்கள், இனவழிப்பு போன்றவற்றுக்கு எதிரான போராட்டத்தையும் -

இந்த குற்றங்களைப் புரிந்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி, பொறுப்புக் கூறலை நிலை நாட்டுவதையும் -

நோக்கமாகக் கொண்ட ரோம் பட்டயத்தின் கீழ் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஸ்தாபிக்கப்பட்டது.

பொதுவாக சகல பிணக்குகள், அநீதிகள், முறையற்ற வகையிலான பாதிப்புகளுக்கு நீதி வேண்டி நிற்பதை 'சர்வதேச நீதித் தினம்' குறித்து நிற்குமாயினும், அது விசேடமாக யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், இனவழிப்புகள் போன்றவற்றின் பாதிப்புகளுக்கு நீதி பெற்றுக் கொடுப்பதையே சுட்டி நிற்கின்றது என்பது தெளிவு.

1998 இல் ரோம் பட்டயம் உருவான போதிலும் அதில் இலங்கை ஒப்பமிடவில்லை. அதனால் அந்தப் பட்டயத்தின் கீழ் சர்வதேச விசாரணையில் சிக்காமல் அது தப்பிக் கொண்டுள்ளது என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

எனினும், ரோம் பட்டயம் உருவாக்கப்பட்ட பின்னர், அதில் பிரதானமாகக் குறிப்பிடப்படும் யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், இனவழிப்பு நடவடிக்கைகளினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட தரப்பு ஈழத் தமிழினம்தான்.

ஆனால், ரோம் பட்டயத்துக்கான நீதி ஈழத் தமிழர்களுக்குக் கிட்டவேயில்லை. அவர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு நீதி கிட்டவில்லை. மனித குலத்துக்கு எதிரான கொடூரங்களை அவர்கள் மோசமான எதிர்கொண்டார்கள். அதற்கான பொறுப்புக் கூறல் நிலைநாட்டப்படவில்லை. தமிழினம் திட்டமிட்டு இனவழிப்புச் செய்யப்பட்டது. அந்தக் கொடூரத்தைப் புரிந்தவர்கள் சட்டத்தின் முன் கொண்டு வரப்படவேயில்லை.

இங்கு தமிழர்களுக்கு எதிராக இந்தக் குற்றங்களைப் புரிந்த குற்றவாளிகள் சுதந்திர புருஷர்களாக பொதுவில் நடமாடுகின்றமை மட்டுமல்லாமல், சிங்களத்தினால் பெரும் கதாநாயகர்களாகவும் போற்றப்படுகின்றார்கள்.

இனவழிப்புக் குற்றங்களைச் செய்தவர்களுக்கு சட்ட விலக்களிப்பும், சட்டப் பாதுகாப்பும் ஆட்சித் தரப்பால் உறுதி செய்யப்பட்டுள்ளன.

நான்கு சிறுவர்கள் உட்பட எட்டு அப்பாவிப் பொதுமக்களைக் கொன்ற கொடூரக் குற்றத்துக்காக மூன்று நீதிபதிகளைக் கொண்ட 'ட்ரயல் அட் பார்' நீதிமன்றத்தின் ஆயத்தினால் ஏகமனதாகக் குற்றவாளியாகக் காணப்பட்டு மரண தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்ட கீழ் நிலை இராணுவ அதிகாரியின் தண்டனைத் தீர்ப்பை, ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதி மன்ற ஆயம் ஏகமனதாக உறுதி செய்த பின்னரும், ஜனாதிபதியின் மன்னிப்பின் கீழ் அந்த அதிகாரி விடுவிக்கப்படுகின்றார்.

இதுதான் இலங்கையின் யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் நீதியின் சித்துவம்.

இந்தப் பின்புலத்தில் இன்றைய சர்வதேச நீதித் தினத்தை தமிழர்கள் எப்படித் திருப்தியுடன் அனுஷ்டிக்க முடியும்?

தமிழர்களைப் பொறுத்த வரை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் என்ற நீதித்துறை எட்டாத தொலைவில் - கிட்டாத நீதியாக - உள்ளது.

தமக்குக் கிடைக்காத - கிட்டாத - இந்த நீதிக்காக, சர்வதேச நீதித் துறைத் தினத்தை அனுஷ்டிப்பதற்குத் தமிழர்களுக்கு காரணம் ஏதும் இல்லை என்பதுதான் உண்மையாகும்.

'நீதி நிலை நாட்டப்படுவது மட்டுமன்றி, நிலை நாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்.' - என்பார்கள்.

தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள், இனவழிப்பு ஆகியவை தொடர்பில் நீதி நிலை நாட்டப்படவுமில்லை; நிலைநாட்டப்பட்டதாகக் காட்டப்படவும் இல்லை. இதுதான் தமிழரின் துரதிஷ்டம்.

# சம்பந்தன், மாவை, செல்வம் ஆகியோரை தமிழர் இம்முறை தோற்கடிக்க வேண்டும்

## அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் வலியுறுத்து



தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தக்க பாடம் ஒன்றைத் தமிழ் மக்கள் இம்முறை புகட்ட வேண்டும். குறிப்பாக எம்மை ஏமாற்றி நடு வீதியில் விட்ட சம்பந்தன், மாவை சேனாதிராஜா மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரை நாம் இம்முறை தோற்கடிக்க வேண்டும். சிரேஷ்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கரங்களை வடக்கு, கிழக்கு மக்களாகிய நாம் பலப்படுத்த வேண்டும். ஏனெனில் எதிர்வரும் அரசில் பலம் பொருந்திய அமைச்சராக அவர் இருப்பார். தொழில் இல்லாமல் உள்ள எமது இளைஞர், யுவதிகளின் வேலையில்லாப் பிரச்சினைகளையும் அபிவிருத்தியையும் அவரினால் பெற முடியும்.

– இவ்வாறு அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ்.லோகநாதன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம், காரைதீவுப் பகுதியில் இன்று மாலை 3 மணியளவில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நம்பிக்கை இல்லாமல் இருந்த எம்மை கிழக்கில் செயற்பட்ட விடுதலைப்புலிகளின் தலைவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்கவே ஆதரவைத் தெரிவித்து வந்தோம். விடுதலைப்புலிகளில் இருந்த நம்பிக்கையில் தான் கூட்டமைப்பினருக்கு ஆதரவை வழங்கியிருந்தோம்.

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் ஏதாவது பிரச்சினை ஏற்படுகின்றபோது சம்பந்தனுக்கோ அல்லது மாவை சேனாதிராஜாவுக்கோ தொலைபேசியில் தொடர்பை நாம் மேற்கொள்ளும்போது தாங்கள் ஒரு கூட்டத்தில் இருக்கின்றார்கள் எனக் கூறி இரவு வேளையில் தொடர்புகொள்ளுமாறு கேட்பார்கள். ஆனால், இரவு வேளையில் தொலைபேசியினூடாகத் தொடர்புகொள்ள முயற்சித்தால் தொடர்பைத் துண்டித்து விடுவார்கள். செல்வம் அடைக்கலநாதனும் அப்படித்தான் எம்மைப் புறக்கணித்தார். அடுத்ததாக இவர்களுக்கு அனுப்பும் கடிதங்களுக்குக் கூட பதிலளிப்பதில்லை. கூட்டம், கலந்துரையாடல் என மக்களின் பிரச்சினைகளுக்கு எவ்வித தீர்வுகளையும் காணாது இவர்களது செயற்பாடு அமைந்துள்ளது.

எங்களுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருடன் கதைக்க முடியாமல் இருப்பது சிரமமாக உள்ள நிலையில் தமிழ் மக்கள் எவ்வாறு இவர்களை சந்திப்பது என்ற கேள்வி எழுகின்றது.

தேர்தல் காலங்களில் மாத்திரம் வடக்கு, கிழக்கு மக்களை ஏமாற்றி அதைச் செய்யப் போகின்றோம்; இதைச் செய்யப்போகின்றொம் எனக் கூறி இனப்பிரச்சினை தீர்ப்பது தொடர்பாக தொடர்ச்சியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏமாற்றி வந்திருக்கின்றது. இன்று மக்கள் கண்ணீரும் கம்பலையுமாக இருக்கின்றார்கள். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நாடாளுமன்றம் சென்று சுகபோக வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டு இருக்கின்றனர். எனவே, மக்கள் இம்முறை தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தகுந்த பாடம் ஒன்றைக் கற்பிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்.

குறிப்பாக எம்மை ஏமாற்றி நடு வீதியில் விட்ட சம்பந்தன், மாவை சேனாதிராஜா மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரை நாம் தோற்கடிக்க வேண்டும். சிரேஷ்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கரங்களை வடக்கு, கிழக்கு மக்களாகிய நாம் பலப்படுத்த வேண்டும். ஏனெனில் எதிர்வரும் அரசில் பலம் பொருந்திய அமைச்சராக அவர் இருப்பார். தொழில் இல்லாமல் உள்ள எமது இளைஞர், யுவதிகளின் வேலையில்லாப் பிரச்சினைகளையும் அபிவிருத்தியையும் அவரினால் பெற முடியும் – என்றார்.

# கொரோனாத் தொற்றுத் தடுப்புக் கடமைகளில் இருந்து விலகுவதற்குப் பொது சுகாதார பரிசோதகர்கள் முஸ்தீபு



நாட்டில் முன்னெடுக்கப்படும் கொரோனா தொற்றுத் தொடர்பான கடமைகளில் இருந்து விலகுவதற்கு பொது சுகாதார பரிசோதகர்கள் தீர்மானித்துள்ளனர்.

அண்மையில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னி ஆராய்ச்சி வெளியிட்ட கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தே பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளனர் என்று கூறப்பட்டது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது:–

நாட்டில் கண்டறியப்படும் கொரோனால் தொற்றுத் தொடர்பான பிந்திய தகவல்களை பகிரங்கப்படுத்துவதால் அசௌகரியங்கள் ஏற்படுகின்றன என அண்மையில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னி ஆராய்ச்சி குறிப்பிட்டிருந்தார்.

சுகாதார அமைச்சின் இந்தக் கருத்துக்கு எதிர்ப்பு வெளியிடும் வகையில் கொவிட் 19 தொற்றுத் தொடர்பான அனைத்துக் கடமைகளில் இருந்தும் விலகுவதற்கு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தீர்மானித்துள்ளனர்.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கொவிட் 19 தொற்று தொடர்பான கடமைகளில் ஈடுபடுவதால் அசௌகரியங்கள் ஏற்படுவதாக சுகாதார அமைச்சர் கருதுவதால், அந்தப் பணிகளில் இருந்து இன்று நண்பகல் 12 மணி முதல் விலகுவதற்கு தீர்மானித்துள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கூறியுள்ளனர்.

எதிர்காலத்தில் கொரோனா தொற்று தொடர்பான தகவல்களை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஊடகங்களுக்கு வெளியிடுவதை தவிர்ப்பார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது தீர்மானம் தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளதாகவும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஒன்றியத்தின் தலைவர் எம்.ஜி.யூ.ரோஹண தெரிவித்துள்ளார்.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஒன்றியத்தின் நிறைவேற்று பேரவை இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாகவும் மாவட்ட பிரதிநிதிகளின் நாளைய சந்திப்பின் பின்னர் மேலதிக தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

சட்டரீதியான பாதுகாப்பு இன்றித் தாம் கடமைகளைத் தொடர்ந்து முன்னெடுக்க முடியாது எனவும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# மும்பையில் இரண்டு கட்டடங்கள் இடிந்து விழுந்ததில் ஐந்து பேர் பலி

மும்பையில் கடந்த 3 நாள்களுக்கும் மேலாக பெய்துள்ள கன மழையால் பழைய கட்டடங்கள் இடிந்து விழும் தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

நேற்று ஒரே நாளில் சத்ரபதி சிவாஜி ரயில் நிலையம் அருகே மற்றும் மலாட் மால்வானி பகுதியில் உள்ள இருவேறு இடங்களில் இரண்டு கட்டடங்கள் இடிந்து விழுந்ததில் இடிபாடுகளில் பலர் சிக்கிக் கொண்டனர் .பேரிடர் மீட்புப் படையினர் கடும் முயற்சியுடன் மீட்புப் பணிகளை மேற்கொண்டனர்.

இதில் 5 பேர் உயிரிழந்துவிட்டனர்.23 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஒரு பெண் பலத்த காயங்களுடன் இடிபாடுகளில் இருந்து மீட்கப்பட்ட காட்சிகள் விபத்தின் கொடுமையை விளக்குவதாக இருந்தது.





# இந்தியாவில் கொரோனா பாதிப்பு பத்து லட்சத்தையும் தாண்டியது!

## உயிரிழப்பும் 25 ஆயிரத்தைத் தொட்டது




புதுடெல்லி,ஜூலை 17

இந்தியாவில் கொரோனா பாதித்தோரின் எண்ணிக்கை 10 லட்சத்து 3 ஆயிரத்து 832 ஆக அதிகரித்துள்ளது.

மத்திய சுகாதாரத்துறை வெளியிட்டு உள்ள தகவலில் கடந்த 24 மணி நேரத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு அதிகபட்சமாக 34 ஆயிரத்து 956 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டு உள்ளனர். இதனால் நாட்டில் கொரோனா பாதித்தோரின் எண்ணிக்கை 10 லட்சத்து 3 ஆயிரத்து 832 ஆக அதிகரித்துள்ளது. இதேபோல் கொரோனாவால் மேலும் 687 பேர் உயிரிழந்துள்ளனர். இதேபோல் நாட்டில் கொரோனாவுக்கு உயிரிழந்தோரின் எண்ணிக்கையும் 25 ஆயிரத்து 602ஆக உயர்ந்துள்ளது.

நாடு முழுவதும் 3 லட்சத்து 42 ஆயிரத்து 473 பேர் சிகிச்சை பெறும் நிலையில், 6 லட்சத்து 35 ஆயிரத்து 757 பேர் குணமாகியுள்ளனர். மராட்டியத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 2 லட்சத்து 84 ஆயிரத்து 281ஆகவும், பலியானோர் எண்ணிக்கை 11 ஆயிரத்து 194ஆகவும் உயர்ந்துள்ளது.

# இந்தியாவில் கொரோனா பாதிப்பு ஒக.10க்குள் 20 லட்சத்தை எட்டும்

## ராகுல் காந்தி எச்சரிக்கை



இந்தியாவில் ஒகஸ்ட் 10 ஆம் திகதிக்குள் கொரோனா பாதித்தோர் எண்ணிக்கை 20 லட்சத்தைத் தொடக்கூடும் என்று காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி எச்சரித்துள்ளார்.

ட்விட்டர் பக்கத்தில் ராகுல் காந்தி இன்று வெளியிட்ட பதிவில், நாட்டில் கொரோனா பாதிப்பு இந்த வாரம் 10 லட்சத்தை தாண்டும் என கடந்த 14 ஆம் திகதி தாம் பதிவிட்டிருந்தார் எனவும், அதேபோல் தற்போது 10 லட்சத்தை கடந்து விட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் இதே வேகத்தில் கொரோனா தொற்று பரவல் இருந்தால், ஒகஸ்ட் 10 ஆம் திகதிக்குள் இந்தியாவில் 20 லட்சத்துக்கும் மேற்பட்டோர் தொற்றால் பாதிக்கப்படுவர் எனவும் ராகுல் காந்தி குறிப்பிட்டுள்ளார்.

ஆதலால் கொரோனா தொற்றுப் பரவலை தடுக்க உறுதியானதிட்டத்தைவகுத்து அரசுசெயல்படுத்தவேண்டியது அவசியம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# அமெ. அடுத்து இந்தியாவில்தான் அதிக கொரோனா பரிசோதனை

## வெள்ளை மாளிகை தகவல்



உலக அளவில் அமெரிக்காவுக்கு அடுத்து இந்தியாதான் கொரோனா பரிசோதனைகளை அதிக அளவில் மேற்கொண்டுள்ளதாக அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகள் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்திலும், இந்தியா 3 ஆம் இடத்திலும் உள்ளன. அமெரிக்காவில் 35 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளமையோடு, 1 லட்சத்து 38 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர். இந்தியாவில் பாதிப்பு 10 லட்சத்தையும், பலி 25 ஆயிரத்தையும் தாண்டியுள்ளது.

இந்நிலையில் வொஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய வெள்ளை மாளிகை பத்திரிகை துறை செயலாளர் கேலெக் மெக்கனி அமெரிக்காவில் இதுவரை 4 கோடியே 20 லட்சம் பேருக்கும் பரிசோதனை நடத்தப்பட்டுள்ளதாகவும், இதற்கடுத்து அதிகபட்சமாக இந்தியாவில் 1 கோடியே 20 லட்சம் பேருக்கு பரிசோதனை நடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். உலகில் அமெரிக்காவும், இந்தியாவும்தான் அதிக பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளதாகவும் மெக்கெனி கூறினார்.

# தெலுங்கானாவில் காணமல் போன 2 ஆயிரம் கொரோனா நோயாளிகள்

தெலுங்கானா மாநிலத்தில் கொரோனா உறுதியான 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை கடந்த 10 நாள்களாக காணவில்லை என அந்த மாநில சுகாதார அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தெலுங்கானாவில் கொரோனாவால் 41 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் கொரோனாவால் இதுவரை 396 பேர் பலியாகியுள்ளனர். கொரோனா பாதித்தோரில் 27,295 பேர் குணமான நிலையில், 13,328 பேர் சிகிச்சையில் உள்ளனர். இந்நிலையில் மாநில சுகாதார அமைச்சக வட்டாரங்கள், அரசு மருத்துவமனைகளிலும், பல்வேறு மையங்களிலும் பரிசோதனை நடத்திகொரோனாஉறுதியான 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை 10 நாள்களாக காணவில்லை எனத் தெரிவித்துள்ளன.

கொரோனா பரிசோதனையின்போதுதவறான தொலைபேசிஎண்களையும், தவறான வீட்டு முகவரியையும் கொடுத்ததால் அந்த நபர்களை சுகாதார மற்றும் உள்ளாட்சி அதிகாரிகளால் கண்டுபிடிக்க முடிய வில்லை எனவும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.



# சென்னையில் ஒரே ஜவுளிக்கடையில் ஐம்பது ஊழியர்களுக்குக் கொரோனா

ஒரே ஜவுளிக்கடையில் 50 ஊழியருக்கு கொரோனா உறுதியாகியுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை பூவிருந்தவல்லி பகுதியில் பிரபல கோல்டன் டெக்ஸ்டைல் கடை இயங்கி வருகிறது. இங்கு 80க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில் அங்கிருந்த ஊழியர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதை தொடர்ந்து அங்கிருந்த 60 பேரை சுகாதாரத்துறையினர் சோதனை செய்தனர். அதில் 50 பேருக்கு உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து அந்த துணிக்கடை, நகராட்சி அதிகாரிகளால் மூடப்பட்டது. கொரானோ தொற்று உறுதி செய்யப்பட்ட ஊழியர்களும் அவர்களது குடும்பத்தினரும் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் சமீபத்தில் அக்கடைக்கு சென்ற பொது மக்கள் சுய தனிமைப்படுத்திக் கொள்ளவும், ஏதேனும் நோய் அறிகுறி இருந்தால் உடனடியாக நகராட்சி நிர்வாகத்திற்கு தெரிவிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். பூவிருந்தவல்லி நகராட்சியில் இதுவரை மொத்தமாக 410 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் 260 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் கொரோனா பாதிப்பு உச்சம்: ஒரே நாளில் 71 ஆயிரம் பேருக்குத் தொற்று!


வொஷிங்டன்,ஜூலை 17

உலகளவில் கொரோனா பாதிப்பில் முதலிடத்தில் உள்ள அமெரிக்காவில் தொற்றில் புது உச்சமாக நேற்று ஒரே நாளில் 71 ஆயிரம் பேருக்கு கொரோனா தொற்று உறுதியானது. மேலும் 974 பேர் ஒரே நாளில் உயிரிழந்தனர்.

உலக நாடுகளை அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் காரணமாக அமெரிக்காவில் மோசமான பாதிப்பை சந்தித்துள்ளது. நேற்று(ஜூலை 16) ஒரே நாளில் மட்டும் 71, 135 பேருக்கு கொரோனா உறுதியாகியுள்ளது. இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. இதனால், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 35 லட்சத்து 70 ஆயிரத்து 037 ஆக அதிகரித்துள்ளது. மேலும் 974 பேர் உயிரிழந்ததால், பலி எண்ணிக்கை ஒரு லட்சத்து 38 ஆயிரத்து201 ஆக அதிகரித்துள்ளது. 16 லட்சத்து 79 ஆயிரத்து 633 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.



## இதுவரை இல்லாத மிகவும் நெருக்கத்தில் சூரியனுக்கு அருகில் எடுக்கப்பட்ட படம்



சூரியனை இதுவரை இல்லாத நெருக்கத்திற்கு சென்று எடுக்கப்பட்ட புகைப்படங்கள் வெளியாகியுள்ளன. சூரியனில் இருந்து 77 மில்லியன் கிலோ மீற்றர் தூரத்தில் எடுக்கப்பட்ட படங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் பெரும் தீப்பிழம்புகள், போன்ற காட்சிகள் காணப்படுகின்றன.


நாசா விஞ்ஞானிகள் மற்றும் ஐரோப்பிய விஞ்ஞானிகள் இணைந்து சூரிய கோளின் சுற்றுப்பாதையை ஆய்வு செய்ய இ.எஸ்.ஏ. என்ற திட்டத்தை கடந்த பெப்ரவரி மாதம் முதல் செயல்படுத்தி வருகின்றனர்.

இதில் சூரியனைப் பற்றிய பலவகையான தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. அடுத்து வரும் ஆண்டுகளில் இந்த ஆய்வு மிகப்பெரிய முன்னேற்றத்தை அடையும் என்றும் அறிவியல் வல்லுநர்கள் நம்பிக்கைத் தெரிவித்துள்ளனர்

## ட்ரம்பை விமர்சித்து பெறாமகள் எழுதிய புத்தகம் விற்பனையில் பெருஞ்சாதனை!

அமெரிக்க அதிபர் டிரம்பை விமர்சித்து அவரது அண்ணன் மகள் எழுதியுள்ள புத்தகத்தின் அனைத்துப் பிரதிகளும், விற்பனைக்கு வந்த முதல் நாளிலேயே விற்றுவிட்டன என அதன் வெளியீட்டாளர் சைமன் அண்ட் ஸ்கஸ்டர் தரப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

மேரி டிரம்ப் எழுதியுள்ள **too Much and Never Enough: How My Family Created the World's Most Dangerous Man** என்ற புத்தகமானது, கடந்த செவ்வாயன்று விற்பனைக்கு வந்தது. இந்நிலையில் புக்கிங் விற்பனை, இ - புக் மற்றும் ஒடியோ என 9 லட்சத்து 50 ஆயிரம் பிரதிகள் விற்பனையாகி முதல்நாள் விற்பனையில் சாதனை படைத்துள்ளதாக வெளியீட்டாளர் தரப்பு அறிவித்துள்ளது.



இந்தப் புத்தகத்தில் ட்ரம்ப் மோசமானவராகச் சித்திரிக்கப்பட்டு இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## டுனிசியா பிரதமர் ராஜினாமா!

டுனிசியா,ஜூலை17

டுனிசியா நாட்டின் பிரதமர் எலிஸ் பக்பாக் பதவி விலகி உள்ளார். அவர் தனது ராஜினாமாக் கடிதத்தை அதிபர் கைஸ் சையத்திடம் அளித்தார்.



கடந்த நாடாளுமன்றத் தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து ஜனவரி மாதம்தான் எலிஸ் பக்பாக் பிரதமர் பதவிக்கு வந்தார். ஆனால் அவருக்கு எதிராக எதிர்க்கட்சி, நாடாளுமன்றத்தில் நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டு வரும் நடவடிக்கையில் இறங்கியதால் அவர் தமது பதவியை ராஜினாமா செய்தார்.

## பப்புவா நியூ கினியா பெரும் நில நடுக்கம்

பப்புவா நியூ கினியா பகுதியில் இன்று காலை 7.3 ரிக்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து உடனடியாக தெரியவரவில்லை.



இந்த நிலநடுக்கத்தை அடுத்து எந்தவித சுனாமி எச்சரிக்கையும் விடப்படவில்லை என்று பொது மக்களுக்கான கூகுள் அலர்ட் முதலில் தெரிவித்து இருந்தது.

ஆனால், நிலநடுக்கம் ஏற்பட்ட இடத்தில் இருந்து சுமார் 300கி.மீற்றர் தொலைவிற்கு சுனாமி எச்சரிக்கை விடப்பட்டுள்ளது என்று பிந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கொரோனாத் தடுப்பு மருந்து ஆராய்ச்சித் தகவல்களை இங்கிலாந்திடம் இருந்து திருட ரஷ்யா முயல்கின்றதாம்

லண்டன்,ஜூலை17

கொரோனா தடுப்பு மருந்து ஆராய்ச்சி தகவல்களைத் திருட முயற்சிப்பதாக ரஷ்யா மீது இங்கிலாந்து குற்றம் சுமத்தி உள்ளது.

இங்கிலாந்து கொரோனா வைரஸுக்குத் தடுப்பு மருந்து கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள நாடுகளில் ஒன்று. கடந்த சில நாள்களுக்கு முன்பு தடுப்பு மருந்து கண்டுபிடிக்கும் முயற்சியில் இறுதி கட்டத்தை எட்டிவிட்டதாக அந்நாட்டு அறிவித்து இருந்தது.

இங்கிலாந்தில் கண்டுபிடிக்கப்படும் கொரோனா வைரஸ்தடுப்பு மருந்துதான் முதலில் மக்கள் பயன்பாட்டுக்கு வரும் என நம்பப்படுகிறது

இந்நிலையில், ரஷ்யாவைச் சேர்ந்த ஹக்கர்கள் கொரோனா வைரஸ் தடுப்பு மருந்து ஆராய்ச்சி தொடர்பான அறிவுசார் தகவல்களைத் திருட முயற்சிக்கின்றனர் என இங்கிலாந்து குற்றச்சாட்டியுள்ளது.

இதற்கிடையில், கடந்த ஆண்டு நடைபெற்ற இங்கிலாந்து பொதுத்தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன என வெளியுறவுத்துறைச் செயலாளர் டொமினிக் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து - அமெரிக்கா இடையேயானி இரகசிய வியாபாரத் தகவல்களைத் திருடி இணையத் தளத்தில்



வெளியிட்டு அதன் மூலம் தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்த முயற்சிகளை ரஷ்யா செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

தேர்தலில் தலையீடு, கொரோனா தடுப்பு மருந்து ஆராய்ச்சி தகவல் திருட முயற்சி என இங்கிலாந்து தெரிவித்த இரண்டு குற்றச்சாட்டுகளுக்கும் ரஷ்யா மறுப்பு தெரிவித்துள்ளது.

மேலும், இந்தக் குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரமற்றது என ரஷ்யா தெரிவித்துள்ளது.

## இங்கிலாந்தின் குற்றச்சாட்டுக்கு தகுந்த பதிலடி தருமாம் ரஷ்யா

கொரோனா தடுப்பு மருந்து தகவல் திருட்டு குற்றச்சாட்டுக்காக இங்கிலாந்திற்குத் தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என ரஷ்யா எச்சரித்து உள்ளது

இதற்கிடையில், கடந்த ஆண்டு நடைபெற்ற இங்கிலாந்து பொதுத்தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன என வெளியுறவுத்துறைச் செயலாளர் டொமினிக் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து - அமெரிக்கா இடையேயான ரகசிய வியாபார தகவல்களை திருடி இணையதளத்தில் வெளியிட்டு அதன் மூலம் தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்த முயற்சிகளை ரஷ்யா செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

தேர்தலில் தலையீடு, கொரோனா தடுப்பு மருந்து ஆராய்ச்சி தகவல் திருட முயற்சி என இங்கிலாந்து தெரிவித்த இரண்டு குற்றச்சாட்டுகளுக்கும் ரஷ்யா மறுப்புத் தெரிவித்துள்ளது.

மேலும், இந்தக் குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரமற்றது எனவும், நட்பற்ற செயல்பாடுகளை ரஷ்யா ஒருபோதும் பொறுத்துக் கொள்ளாது எனவும், தகுந்த பதிலடி தருவதே வழக்கம் எனவும் ரஷ்யா மிரட்டல் விடுத்து உள்ளது.

# வடக்கு, கிழக்கு, பெருந்தோட்டப் பாடசாலைகளின் சுகாதார உட்கட்டமைப்புக்கு இந்திய அரசு உதவி



வடக்கு, கிழக்கு மற்றும் பெருந்தோட்டப் பகுதிகளில் காணப்படும் பாடசாலைகளின் சுகாதார வசதிகளையும் உட்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்த இந்திய அரசு நிதி உதவி வழங்க முன்வந்துள்ளது.

கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பக்லே தலைமையிலான குழுவுடன் கல்வி அமைச்சில் நடைபெற்ற விசேட சந்திப்பின்போதே இவ்வாறு நிதி உதவி வழங்கப்படும் என்று இந்தியத் தூதுவர் உறுதியளித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மற்றும் பெருந்தோட்டப் பகுதிகளின் பாடசாலைகளுக்கும், அபிவிருத்தி அத்தியாவசியமாகவுள்ள சிறிய பாடசாலைகளுக்கும் உதவியளிக்குமாறு இதன்போது கல்வி அமைச்சர் கோரிக்கை விடுத்திருந்தார்.

அதன்பிரகாரமே வடக்கு, கிழக்கு மற்றும் பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளின் சுகாதார வசதிகளையும், உட்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்த இந்திய அரசு உதவி வழங்கும் என்று இந்தியத் தூதுவர் உறுதியளித்துள்ளார்.

எதிர்காலத்தில் சிறிய பாடசாலைகளின் அபிவிருத்திக்கும் உதவியளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சரிடம் அவர் கூறியுள்ளார்.

## அதிக நகைகள் அணிந்து வீதிக்கு வராதீர்! யாழ். பெண்களிடம் பொலிஸ் கோரிக்கை



யாழ்ப்பாணத்தில் வீதிகளில் பயணிக்கும் பெண்கள் தங்க நகைகளை அதிகளவில் அணிந்து செல்வதை தவிர்க்குமாறு யாழ் மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி நிகால் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அண்மைய நாள்களில் வீதிகளில் செல்லும் பெண்களிடம் நகைகள் கொள்ளையிடும் சம்பவம் அதிகளவில் இடம்பெற்று வருகின்றது. இது தொடர்பான முறைப்பாடுகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் பொது மக்களினால் பதியப்பட்டுள்ளன.

அவை தொடர்பில் யாழ் மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினரால் துரிதமான நடவடிக்கை எடுக்கப்பட்டு பலர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இன்றும் பாரிய கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

மக்களுக்கு நான் ஒரு கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றேன் யாழ்ப்பாண குடாநாட்டில் வீதிகளில் பயணிக்கும் பெண்கள் தங்க நகைகளை அதிகளவில் அணியாது செல்வதன் மூலம் திருட்டு செயல்களை கட்டுப்படுத்த முடியும்.

எனினும் பொலிஸாரினால் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் நாளாந்தம் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு வருகின்றார்கள். எனவே இது தொடர்பில் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். – என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## மட்டக்களப்பில் இதுவரை 90 தேர்தல் முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூலை 17

பொதுத் தேர்தல் 2020 நடைபெறுவதற்கு இன்னும் 3 வாரங்கள் உள்ள நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் சட்டவிதிகளை மீறி செயற்பட்டமை தொடர்பாக மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் முறைப்பாடுகளை பொறுப்பேற்கும் அலுவலகத்திற்கு இதுவரை 90 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதனடிப்படையில் ஏறாவூர் பொலிஸ் பிரிவில் 22 முறைப்பாடுகளும், மட்டக்களப்பு, வாழைச்சேனை, காத்தான்குடி ஆகிய பொலிஸ் பிரிவுகளில் தலா 20 முறைப்பாடுகளும், களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவில் 3 முறைப்பாடுகளும், வாகரை பொலிஸ் பிரிவில் 2 முறைப்பாடுகளும், வவுணதீவு மற்றும் மங்களகம பொலிஸ் பிரிவுகளில் தலா ஒரு முறைப்பாடும், பொதுவாக 1 முறைப்பாடுமாக மொத்தம் 90 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இவற்றில் சட்டவிரோத பதாதைகள், சுவரொட்டிகள் தொடர்பாக 37 முறைப்பாடுகளும், அரச ஊழிளர்கள் அரசியலில் ஈடுபட்டமை தொடர்பாக 15 முறைப்பாடுகளும், அன்பளிப்பு வழங்கல் தொடர்பாக 13 முறைப்பாடுகளும், கூட்டம் மற்றும் ஊர்வலங்கள் தொடர்பாக 12 முறைப்பாடுகளும், அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பாக 6 முறைப்பாடுகளும், நியமனங்கள் மற்றும் இடமாற்றம் தொடர்பாக 3 முறைப்பாடுகளும், சொல் அச்சுறுத்தல் செய்தமை, தாக்குதல் செய்தமை, பொய்ப்பிரச்சாரம் செய்தமை, அஞ்சல் வாக்கு தொடர்பாக, சட்டவிரோத நிகழ்வு ஏற்பாடு செய்தமை, வாக்காளர் உபசரிப்பு போன்றவை தொடர்பாக தலா ஒவ்வொரு முறைப்பாடுகளுமாக 90 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இம்முறைப்பாடுகளில் தேர்தல் சட்டவிதி மீறல் தொடர்பாக 88 முறைப்பாடுகளும், தேர்தல் வன்முறைகள் தொடர்பில் 2 முறைப்பாடுகளும் இனங்காணப்பட்டுள்ளன. இவற்றில் 87 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், ஏனைய 3 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் அரசாங்க அதிபருமான திருமதி. கலாமதி பத்மராஜா மாவட்ட அரச ஊடகப் பிரிவிற்கு தகவல் தெரிவித்தார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு - மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் - 076 443 8622



## இரண்டாம் புவனேகபாகு மன்னனின் அரச மண்டபம் குருநாகலில் அழிப்பு

குருநாகல் பிரதேசத்தைத் தனது ராஜதானியாக கொண்டு ஆட்சி செய்த இரண்டாவது புவனேகபாகு மன்னனின் அரச மண்டபம் உடைக்கப்பட்டுள்ள சம்பவம் தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள போதிலும் பொலிஸார் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை எனத் தொல் பொருள் திணைக்கள ஆணையாளர் பேராசிரியர் செனரத் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த மண்டபம் மற்றும் அருகில் உள்ள கட்டடம் என்பவற்றை தொல்லியல் நினைவிடங்களாகக் கருதி தொல் பொருள் திணைக்களத்தின் கண்காணிப்பின் கீழ் அவை இருந்து வந்தன்ச்.

பல வருடங்களாக இந்த கட்டடத்தில் குருணாகல் மாநகர சபை ஹோட்டல் ஒன்றை நடத்தி வந்தது. இந்த நிலையில், தொல்லியல் பெறுமதிமிக்க அந்தக் கட்டடம் இடிக்கப்பட்டுள்ளமை மிகப் பெரிய அநியாயம் எனவும் செனரத் திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சின் செயலாளரது ஆலோசனைக்கு அமைய இந்தச் சம்பவம் தொடர்பாகப் பதில் பொலிஸ் மா அதிபரிடம் எழுத்து மற்றும் வாய்மொழி மூலம் முறைப்பாடு செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

இரண்டாம் புவனேகபாகு மன்னன் கி.பி. 1293 ஆம் ஆண்டு முதல் 1302 ஆம் ஆண்டு வரை குருநாகல் ராஜதானியை ஆட்சி செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மக்களால் சுகாதார வழிகாட்டல்கள் முறையாகப் பின்பற்றப்படுகின்றனவா?

### ஆராய விசேட குழு நியமனம்

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவற்கு வழங்கப்பட்டுள்ள சுகாதார வழிமுறைமைகள் மற்றும் வழிகாட்டல்கள் கீழ் மட்டத்தில் முறையாகப் பின்பற்றப்படாதது குறித்து கவனம் செலுத்தப்படவுள்ளது.

கொரோனாத் தொற்றின் தற்போதைய நிலைமை தொடர்பாக கொரோனாவைக் கட்டுப்படுத்தும் செயலணி நேற்றுக் கூடி இது தொடர்பில் ஆராய்ந்துள்ளது.

சுகாதார வழிகாட்டல்கள் பரிந்துரைகள், ஆலோசனைகள் என்பவற்றை மக்கள் பின்பற்றுகின்றார்களா என்பது குறித்து கண்காணிப்பதற்காக பிரிவொன்றை உருவாக்க இதன்போது முடிவு செய்யப்பட்டது.

போக்குவரத்து, மருந்தகம், வர்த்தக சந்தைகள், வைத்தியசாலை, தொழில் புரியும் இடங்கள் என்பவற்றில் பின்பற்ற வேண்டிய சுகாதார பாதுகாப்பு முறைகள் சரியாகப் பின்பற்றப்படுகின்றனவா என்பது குறித்து ஆராய்ந்து அவற்றைப் பலப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் கீழுள்ள பல்வேறு பிரிவுகளினூடாக மக்களை அறிவூட்டவும், சுகாதார வழிமுறைகளை பின்பற்றுவதன் அவசியத்தை வலியுறுத்தவும் இதன்போது முடிவு செய்யப்பட்டது என சுகாதார அமைச்சு குறிப்பிட்டது. தொற்றாளர்களைத் தேடிச் சென்று பரிசோதனை நடத்தும் செயன்முறைகளை மேலும் பலப்படுத்தவும் இந்தக் கூட்டத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்பரவரி 18ஆம் திகதி முதல் ஜூலை 15ஆம் திகதி வரையான 5 மாத காலத்தினுள் ஒரு இலட்சத்து 31 ஆயிரத்து 527 பி.சி.ஆர். பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன என்று இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது. பொரளை ஆய்வு நிலையத்தினூடாகவே கூடுதலான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தச் சந்திப்பில் கொரோனாவைத் தடுக்கும் செயலணியில் அங்கம் வகிக்கும் அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் சஞ்ஜீவ முனசிங்க, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க உட்பட அதில் அங்கம் வகிக்கும் 35 பேரும் கலந்து கொண்டனர்.

# நண்பர்கள் வாக்குவாதம் படுகொலையில் முடிந்தது

களனி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தல்வத்த, கோணவல பிரதேசத்தில் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வாடகை அறை ஒன்றில் தங்கியிருந்த நண்பர்கள் இருவருக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியதன் காரணமாக இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஒருவர், மற்றொருவர் மீது கூரிய ஆயுதத்தால்தாக்கியதைத்தொடர்ந்து, படுகாயமடைந்தவர், கிரிபத்கொடை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

மடுல்சீம, கல்லூல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர்கள் இருவரும் தொழில் தேடி வந்து குறித்த இடத்தில் வாடகைக்குத்தங்கியிருந்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவர் நேற்று மஹர நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். அவருக்கு 14 நாட்கள் விளக்கமறியல் உத்தரவு நீதிவானால் பிறப்பிக்கப்பட்டது.

கொலைச் சம்பவம் தொடர்பில் களனிப் பொலிஸார் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சுய தனிமைப்படுத்தலுக்குச் செல்ல துமிந்த, சந்திரசேனவுக்குப் பணிப்பு

## அதை மீறி அவர்கள் தேர்தல் பிரசாரத்தில்



கொழும்பு, ஜுலை 17

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் இம்முறை பொதுத் தேர்தலில் அநுராதபுரம் மாவட்டத்தில் போட்டியிடும் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன மற்றும் முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க ஆகியோரை சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்திக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இவர்கள் ராஜாங்கனைப் பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட முதலாவது கொரோனா நோயாளி கலந்துகொண்ட மரணச்சடங்கு ஒன்றில் கலந்துகொண்டதன் காரணமாகவே அவர்களை சுய தனிமைப்படுத்திக்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

எனினும் இவர்கள் இருவரும் அந்த ஆலோசனைகளை பின்பற்றாது தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

இந்த மரணச் சடங்கில் கலந்துக்கொண்ட பலர் ஏற்கனவே சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பணயக் கைதிகள் பற்றிய பேச்சுக்கென முதல்முறையாக அதிகாரிகள் நியமனம்




பணயக்கைதிகள் தொடர்பான பேச்சு நடத்தும் அதிகாரிகளாக, ஒன்பது சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

விமானங்கள் கடத்தப்படல் மற்றும் பணயக்கைதிகளாக பிடிக்கப்படல் போன்ற சந்தர்ப்பங்களில் சர்வதேச விமானப் போக்குவரத்து விதிமுறைகளுக்கு அமைய பேச்சுகளை மற்கொள்ளும் பொருட்டு இலங்கையில் முதன்முறையாக, இந்த முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒன்பது சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு, பாதுகாப்புச் செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரத்னவினால் நேற்று நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று இடம்பெற்ற இந்த நிகழ்வில், தேசிய சிவில் விமானப் போக்குவரத்து பாதுகாப்பு குழுவின் தலைவர் என்ற ரீதியில் உரையாற்றிய பாதுகாப்புச் செயலாளர், மேற்படி புதிய நியமனங்கள் தக்க தருணத்தில் வழங்கப்பட்டுள்ளது எனவும், இவை பொதுமக்களின் உயிர்களைப் பாதுகாப்பதில் பாரிய பொறுப்புகளை உள்ளடக்கியது எனவும் வலியுறுத்தினார்.

செப்டெம்பர் 11 இற்குப் பின்னர் உலகில் விமானப் போக்குவரத்து துறையில் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் குறித்து தெளிவுபடுத்திய பாதுகாப்புச் செயலாளர், எதிர்காலத்தில் இதுபோன்ற நிலைமைகளைத் தவிர்ப்பதற்கு உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக் காட்டினார்.

மேலும், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மேற்படி அதிகாரிகள், சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரிகளுடன் இணைந்து தங்களது திறனை வளர்த்துக் கொள்வதற்கான செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் எனவும் பாதுகாப்புச் செயலாளர் கேட்டுக்கொண்டார்.

பணயக்கைதிகள் தொடர்பான பேச்சு அதிகாரிகளாக நியமனம் பெற்ற இவர்கள் 2006ஆம் ஆண்டு அமெரிக்காவில் ஐக்கிய நாடுகள் சபையால் வழங்கப்பட்ட பயிற்சி நெறியில் பங்குகொண்டவர்களாவர்.

இந்த நியமனங்கள் அனைத்தும் சர்வதேச சிவில் விமான அமைப்பு உறுப்பு நாடுகளிடையே நடைமுறையில் உள்ள சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு விதிமுறைக்கு அமைய மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும், இவர்கள் இதற்கமையவே தமது செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளன எனவும் விமானப் பாதுகாப்பு ஒழுங்குமுறை பிரதிப் பணிப்பாளர் நாயகம் பி.ஏ. ஜயகாந்த தெரிவித்தார்.

இந்த நியமனம் தொடர்பில் 2016ஆம் ஆண்டு முதல் தேசிய சிவில் விமானப் போக்குவரத்து பாதுகாப்பு குழு கூட்டங்களின்போது தொடர்ந்து கலந்துரையாடப்பட்டு வந்தது எனவும் அவர் குறிப்பிட்டார்.

பணயக்கைதிகளாக ஆக்கப்படும்போதான சந்தர்ப்பங்களைக் கையாளுதல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் தொடர்பான ஹேக் மற்றும் டோக்கியோ ஆகிய இரண்டு சர்வதேச உடன்படிக்கைகளில் இலங்கையும் கையொப்பமிட்டுள்ளதுடன் அதன் சட்ட விதிமுறைகளுக்கு இணங்கியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பணயக்கைதிகள் தொடர்பான பேச்சு அதிகாரிகளின் தொழில்துறை சம்பந்தமான கோரிக்கைகளை பூர்த்தி செய்து அவர்களின் திறன்களை விருத்தி செய்ய சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை அனைத்து வாய்ப்புகளையும் வழங்கும் என அதன் பணிப்பாளர் நாயகம் கப்டன் தேமிய அபேவிக்ரம உறுதியளித்தார்.

# மரணதண்டனைச் சிப்பாய்க்கு மன்னிப்பளித்த வழக்கு செப்.24 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜுலை17

மிருசுவிலில் 8 அப்பாவிகளைப் படுகொலை செய்த குற்றத்துக்காக மரணதண்டனை விதிக்கப்பட்ட இராணுவச் சிப்பாயான சுனில்ரட்ணாயக்காவிற்கு ஜனாதிபதிமன்னிப்பளித்தமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் தொடர்பான 4 வழக்குகளும் செப்ரெம்பர் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன.

2000.12.19 ஆம் ஆண்டு மிருசுவிலில் பகுதியில் 5 வயதுச் சிறுவன் உள்ளிட்ட 4 சிறுவர்களும் 4 ஆண்களுமாக 8 பேரைப் படையினர் படுகொலை செய்த வழக்கில் ‘ட்ரயல் அட் பார்’ விசாரணை மூலம் 2015 ஜுலையில் குற்றவாளி எனக் காணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட – இராணுவத்தைச் சேர்ந்த – சுனில் ரட்ணாயக்கா அந்த மரண தண்டனைத் தீர்ப்பை எதிர்த்து உயர் நீதிமன்றில் மேன் முறையீடு செய்திருந்தார். அந்த மேன்முறையீடு 5 நீதியரசர்கள் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. 2016 ஆம் ஆண்டு மேற்படி மரண தண்டனை ஐந்து நீதியரசர்கள் ஆயத்தினால் ஏகமனதாக உறுதி செய்யப்பட்டது . அவ்வாறு தண்டனை உறுதி செய்யப்பட்ட இராணுவத்தைச் சேர்ந்தவரை தற்போதைய ஜனாதிபது கோட்டாபய ராஜபக்ஷ 2020.03.26 அன்று மன்னிப்பளித்து விடுதலை செய்திருந்தார்.

அந்த விடுதலையை ஆட்சேபித்து நான்கு அடிப்படை உரிமை மீறல் வழக்குகள் உயர்நீதிமன்றிலே தாக்கல் செய்யப்பட்டன.

இவ்வாறு விடுதலை செய்யப்பட்டதனை ஆட்சேபித்து – படுகொலை செய்யப்பட்டவர்களில் மூன்று உறவுகளைப் பறிகொடுத்த பெண்மணி சார்பில் சட்டத்தரணி சயந்தன் தாக்கல் செய்த வழக்கில் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் ஆஜரானார். ஏனைய 5 உறவுகள் சார்பிலும் ஜனாதிபதி சட்டத்தரணி ஜப்ரி அழகரட்ணம் நீதிமன்றத்தில் பிரசன்னமானார். பொது நல வழக்காக மாற்றுக் கொள்கைகளிற்கான அமைப்பு தாகல் செய்த மனுவின் சார்பிலும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் முன்னிலையானார். மனித உரிமைச் செயற்பாட்டாளர் அம்பிகா சற்குணநாதன் தாக்கல் செய்த வழக்கில் ஜனாதிபதி சட்டத்தரணி கனகஈஸ்வரன் ஆஜராகினார்.

இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட நான்கு வழக்குகளில் ஒரு வழக்கின் அறிவித்தலே சுனில் இரட்நாயக்காவிற்கு கிடைத்த நிலையில் ஏனைய 3 அறிவித்தலையும் கிடைக்கவில்லை என அவரது சட்டத்தரணி கனிஸ்க்க விதாரன சுட்டிக்காட்டினார். அத்தோடு நீதி அமைச்சின் செயலாளரும் தற்போது மாற்றம் செய்யப்பட்டிருப்பதனால் மனுதாரர்கள் மனுவில் எதிர்மனுதாரராகப் புதிய பெயரை மாற்றவும் கோரிக்கை விடப்பட்டது.

இந்த வழக்கில் அரச தரப்பு சட்டத்தரணியாக நெரின் புள்ளே ஆஜரானார்.

ஏனைய 3 அறிவித்தலையும் அனுப்பவும், நீதி அமைச்சின் செயலாளரின் பெயரை மாற்றும் வகையில் வழக்கு செப்ரெம்பர் 24ஆம் திகதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

# சாத்வீகப் போராட்டங்களில் ஈடுபடும் தேசிய மக்கள் சக்தி

தேசிய மக்கள் சக்தி நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சாத்வீகப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றது.

கொரோனாவினால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள், பொருட்களின் விலையேற்றத்தினால் மேலும் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினர் தெரிவித்துள்ளனர்.

அவர்களினால் திருகோணமலையில் நேற்று சாத்வீகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மாத்தறையில் பிரதான பஸ் நிலையத்துக்கு முன்பாகவும், அதேவேளை அம்பாந்தோட்டை நகரிலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குருநாகல் நகரில் மற்றுமொரு அறவழிப் போராட்டம் ஏற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அநீதி நிறைந்த உலகில் நீதி தழைத்தோங்கட்டும்!

ப. ஜோன் டிலக்ஷன்




ஒவ்வொரு வருடமும் ஜுலை 17 ஆம் திகதி உலக நீதி தினம் கொண்டாடப்படுகின்றது, நீதியை நிலைநாட்டவும், நீதிமன்றங்களின் மீது நம்பிக்கைக் கொள்ளவுமே இத்தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இதே நாளில்தான் உரோமில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உருவாக்கப்பட்டது. இதனாலேயே இந்த நாளை சர்வதேச நீதி நாளாக ஐக்கிய நாடுகள் சபை தேர்ந்தெடுத்து பிரகடனப்படுத்தியது. நீதிமன்றங்களின் மீது நம்பிக்கை உண்டாகவும், தவறு செய்தவர் எவராக இருந்தாலும் அவருக்குத் தகுந்த தண்டனை அளித்திடவும், நிரபராதிகள் தண்டிக்கப்பட்டு விடாமலும் இருக்க இந்த நாள் நினைவுகூரப்படுகின்றது. நாடுகளைத் தாண்டியும் சர்வதேச அளவில் ஒரு நாட்டிற்கான நீதியியைப் பெற்றுக்கொள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உள்ளது என்பதனையும், இது நிச்சயம் நீதியை அளிக்கும் என்பதையும் நினைவுபடுத்தும் நாளாக இன்றைய நாள் அமைகின்றது.

நீதி (Justice) என்ற பதமானது "Justia" என்ற இலத்தீன் சொல்லில் இருந்து உருவானது. நீதி என்ற சொல்லுக்கு பொருள் வழங்குவது எளிதான ஒன்று அல்ல. நீதியின் உள்ளடக்கம், பரிபாலனம் நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றது. கடந்த காலத்தில் நீதி என்று அறியப்பட்டது நிகழ்காலத்தில் நீதியாக ஏற்கப்படுவதில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணத்தினையும், சலுகைகள் மற்றும் சுமைகளை பகிர்ந்து கொள்ளச் செய்வது, தவறு செய்த நபர்களுக்கு தண்டனை வழங்குவதே நீதி என்று பொதுவாக கூறப்படுகின்றது. அது மட்டுமன்றி பக்கம்சாராமல் நேர்மையாக நடக்கும் நிலையினை அது குறிக்கின்றது.

மண்ணில் பிறந்த அனைவரும் சமமானவர்களாவர். ஏழை – பணக்காரன், படித்தவன் – படிக்காதவன், உயர்ந்தவன் – தாழ்ந்தவன், ஆண் – பெண் என்ற எந்தவிதமான வேறுபாடும் இன்றி சமத்துவமாக வாழ வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பு. இதை நிலை நாட்டுவதற்கே ஒவ்வொரு நாட்டிலும் நீதி வகுக்கப்படுகின்றது. ஒரு தனிமனிதனுக்கு அவனது உரிமை, சுதந்திரம் மறுக்கப்படுகின்ற போது அந்த நாட்டின் சட்டம்



அவனுக்கான நீதியினை பெற்றுக் கொடுக்கின்றது. இதற்காகவே ஒவ்வொரு நாட்டிலும் நீதிமன்றங்கள் செயற்பட்டு வருகின்றன. சில நேரங்களில் நீதி மறுக்கப்படுகின்ற போது அல்லது தாமதிக்கின்ற போது அது மக்களின் இயல்பு வாழ்க்கையினைச் சீர்குலைக்கின்றது.

நீதி என்ற கருத்தானது மனிதன் சிந்திக்க தொடங்கிய காலத்தில் இருந்து காணப்பட்டு வருகின்றது எனலாம். நீதி என்ற சொல் கால மாற்றத்திற்கு ஏற்பவும், காலச் சூழ்நிலைக்கு ஏற்பவும் மாற்றமடைந்து கொண்டு செல்கின்றது. மதம், அறநெறி, சமத்துவம், சுதந்திரம், சொத்து, சட்டம், அரசியல், பொருளாதாரம் மற்றும் ஏனைய ஒவ்வொரு துறைகளோடும் தொடர்பு கொண்டதாக விளங்குகின்றது. பல்வகை சமூக அமைப்பிலும் நீதி மிகவும் இன்றியமையாத ஒன்றாக உள்ளது.

நீதியும், சமுதாயமும் சமுதாயத்திலுள்ள அனைவருக்கும் தங்களுடைய திறமையை வளர்த்துக் கொள்ள சமனான வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும். சாதி, மத, நிற, இனம் என எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல் ஒவ்வொரு மக்களுக்கும் சமனான வாய்ப்பு வழங்குவதற்கு நீதித்துறை பாரிய முயற்சியை மேற்கொள்கின்றது. இத்தகைய முயற்சியே சமூதாய நீதி என்று பலராலும் அழைக்கப்படுகின்றது. ஓர் இனம் அல்லது ஒரு சமூகம் அல்லது ஒரு மதம் போன்றோரின் நன்மைக்காக ஏனையவர் துன்பங்கள் அனுபவிக்க வேண்டியதாக இருக்காத சமுதாயத்தில் மட்டுமே சமுதாய நீதியை நிலைநாட்ட முடியும்.

தற்காலத்தில் நீதி சரியாக நிலைநாட்டப்படுகின்றதா என்று பார்க்கும் போது இல்லை என்றே எம்மால் பதிலளிக்க முடியும். எங்கு பார்த்தாலும் நீதிக்குப் பதிலாக அநீதியே நிறைந்து காணப்படுகின்றது. அனைத்து துறையிலும் நீதி என்ற விடயம் தொடர்பு

> மண்ணில் பிறந்த அனைவரும் சமமானவர்களாவர். ஏழை – பணக்காரன், படித்தவன் – படிக்காதவன், உயர்ந்தவன்– தாழ்ந்தவன், ஆண் – பெண் என்ற எந்தவிதமான வேறுபாடும் இன்றி சமத்துவமாக வாழ வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பு. இதை நிலை நாட்டுவதற்கே ஒவ்வொரு நாட்டிலும் நீதி வகுக்கப்படுகின்றது.

படுகின்றது. ஆனால் எந்தவொரு துறையிலும் இழைக்கப்படுகின்ற அநீதிக்காக வழங்கப்படுகின்ற நீதியானது விலை போவதைக் காணமுடிகின்றது. தப்பு செய்பவர் நிச்சயம் தண்டனை அனுபவித்தே ஆக வேண்டும் என்ற கருத்துப் பொய்யாகின்றது. குற்றம் செய்தவர் பணம், அதிகாரம், அந்தஸ்து போன்றவற்றினைப் பயன்படுத்தி குற்றத்திலிருந்து தப்பிக்கின்றார். இச்சந்தர்ப்பத்தில் நீதி என்பது கேள்விக்குறியாகின்றது.

உலகில் பல நாடுகளில் நீதி என்ற விடயம் கேள்விக்குறியான நிலையில் உள்ளது. ஏன் எமது நாட்டினை எடுத்து பார்க்கும் போது நீதி என்ற விடயம் பல சந்தர்ப்பங்களில் மீறப்பட்டுள்ளதனை யாவரும் அறிந்த உண்மையே. உதாரணமாக யாழ்ப்பாணம் மிருசுவில படுகொலையில் நீதி என்பது குழிதோண்டி புதைக்கப்பட்டதனை அவதானிக்க முடிந்தது. 2000 ஆண்டு டிசம்பர் 19 அன்று இராணுவத்தினரால் பிடிக்கப்பட்ட எட்டு தமிழர்கள் 20 ஆம் திகதி கொலைசெய்யப்பட்டனர். சடலங்கள் கழுத்தறுக்கப்பட்ட நிலையில் மலசலக் குழியொன்றில் மீட்கப்பட்டது. இவ்வாறு கொலை செய்யப்பட்ட எட்டுப்பேரில் 5 வயது சிறுவனும், பதின்மவயதுடைய 3 நபர்களும் உள்ளடங்குகின்றனர். சந்தேக நபர்களுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் 2015 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 25 ஆம் திகதி இராணுவத்தில் சார்ஜன் தரத்தில் இருந்த சுனில் ரத்நாயக்க என்பவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. ஆனால் இவர் தற்போது ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பெயரில் விடுவிக்கப்பட்டுள்ளார். இது தமிழின அழிப்புக்கு நீதி கிடைக்காத தன்மையைக் காட்டுகின்றது. இவ்வாறு நீதி மீறப்பட்டது அனைவராலும் விமர்சிக்கப்பட்டது என்பதையும் நாம் அறிந்த உண்மையே.

எமது நாட்டில் அமைதி மற்றும் சமாதானம் கட்டியெழுப்புவதற்கு முதலில் நீதி பரிபாலனம் அனைவருக்கும் சமமாக அமைய வேண்டும். நீதி பரிபாலனம் அனைவருக்கும் சமமாக அமையுமாக இருந்தால், அரசமைப்பு, இனப்பிரச்சினை தீர்விற்கான பேச்சு என ஒன்றுமே தேவைப்படாது. வடக்கு மற்றும் கிழக்கை உயர் நீதிமன்றத்தினால் பிரிக்க முடியுமென்றால் அதனை இணைத்து வைக்கவும் நீதிமன்றத்தால் முடியும். அதேபோன்று தமிழ் அரசியல் கைதிகளை தடுத்து வைப்பதற்கு இடமுண்டாயின் தமிழ் மக்களின் வாழ்விடங்களில் உள்ள படையினரை உடனடியாக வெளியேற்றுமாறு உத்தரவிடவும் முடியும். ஆனால் நீதி ஒரு



பக்கமாக நிற்கின்றது.

இவைமட்டுமல்ல நாம் வாழுகின்ற சமுதாயத்திலும் கூட நீதி மங்கிப்போவதினைக் காணமுடிகின்றது. குடும்பம், பாடசாலை போன்ற பல அடிப்படை சமூகக் கட்டமைப்பிலும் நீதி பேணப்படுவதில்லை. மக்களாட்சி நிலவுகின்ற நாடுகளிலும் சுதந்திரமான, நடுநிலைமையான நீதித்துறை, சட்டமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்கள் நியாயமானவைதானா? ஏற்புடையவையா? என்பதை ஆராயும். சட்டத்தின் காவலாளியாகவும், உரிமைகளின் பாதுகாவலனாகவும் விளங்குகின்றது. இத்தகைய மக்களாட்சிகளில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சட்டத்துறையும், நீதித்துறையும் மோதல்களை சந்திக்க நேரிட்டால் அது நிர்வாகத்துறையினைப் பாதிக்கும்.

நாட்டில் வாழுகின்ற மக்கள் அனைவரும் பாரபட்சமற்ற முறையில் நீதிபெற வேண்டும். சமமான சட்ட பாதுகாப்பு என்பதனை இரு வழிகளில் புரிந்து கொள்ளலாம். முதலாவது, நீதி பெறும் முறைகள் எளிமையானதாகவும், சாமானியர்களுக்கு அதிகம் செலவு பிடிப்பதாகவும் இருத்தல் வேண்டும். இரண்டாவது, நீதி வழங்கும் அமைப்புக்கள் சுதந்திரத்துடனும், எவ்விதமான இடையூகளும் இல்லாமல் இருத்தல் வேண்டும். நீதித்துறையின் செயற்பாடுகளில் தலையிடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். ஆட்சித் துறையின் தலையீடுகள் அறவே இருத்தல் கூடாது. அதுமட்டுமில்லாது நீதித்துறை சுதந்திரமாக செயற்படும் வண்ணம் நீதிபதிகளுக்கு வழங்கப்படும் ஊதியம், பணிவிதிகள், தகுதிகள், அமைய வேண்டும். நீதியை வழங்கும் நீதிபதிகள் மீது எந்தவிதமான அழுத்தமும் இருத்தலாகாது. ஆகவே நாட்டிலும், சமூகத்திலும் நடக்கும் கொடுமைகளைத் தட்டிக் கேட்கவும், நீதி முறைகளைத் தவறாது கடைப்பிடிக்கவும் இந்த நாளில் முன்வரவேண்டும். சமாதானமும், சகிப்புத் தன்மையும் நமக்குள்ளும், நமது சமூதாயத்திற்குள்ளும் உருவாக நாம் முயற்சிக்க வேண்டும். இதற்கு சரியான ஆயுதம் நீதி.

(கட்டுரையாளர் - கிழக்குப் பல்கலைக் கழக சமூகவியல் துறை மாணவர்.)

# வெற்று வாக்குறுதி வழங்குவதில் தந்திரசாலி ரணில் விக்கிரமசிங்க

## ஒரேயடியாகத் தாக்குகின்றார் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன



ஜனாதிபதியின் சுபீட்சமான எதிர்கால கொள்கைத்திட்டமே பொதுஜன பெரமுனவின் பொதுத்தேர்தலுக்கான தேர்தல் விஞ்ஞாபனமாகும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

தேர்தல் பிரசாரத்தின் போது உரையாற்றிய வேளையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க மக்கள் மத்தியில் வாக்குறுதி வழங்குவதில் துறைபோனவர்.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் காலத்தில் 100 நாள் திட்டத்தை தேர்தல் விஞ்ஞாபனமாக வெளியிட்டார். ஆட்சி காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் ஏதும் நிறைவேற்றப்படவில்லை. மாறாக இருந்த பல உரிமைகளும் இல்லாதொழிக்கப்பட்டன.

நிறைவேற்ற முடியாத போலியான கொள்கைத்திட்டத்தையே முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ளார். இந்த வாக்குறுதிகளுக்கு மக்கள் இம்முறை ஏமாற்றமடையமாட்டார்கள்.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி முன்வைத்த கொள்கை பிரகடனம் நாட்டின் இறையாண்மைக்கு முரணானது என்ற காரணத்தினால் மக்கள் அக்கொள்கைகளை முழுமையாக புறக்கணித்தார்கள்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி தேர்தல் காலத்தில் வெளியிட்ட சுபீட்சமான எதிர்கால கொள்கையினை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். ஜனாதிபதியின் கொள்கைத்திட்டத்தை மக்கள் முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

ஆகவே அவர் தலைமையில் அமையவுள்ள அரசாங்கத்துக்கு புதிதாக கொள்கைத் திட்டத்தை தயாரிக்க வேண்டிய அவசியம் கிடையாது.

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தை காரணம் காட்டி எதிர் தரப்பினர் அரசாங்கத்தை பலவீனப்படுத்தி அதனூடாக பொதுத்தேர்தலை பிற்போட முயற்சிக்கிறார்கள். தேர்தல் பலமாக சுகாதார பாதுகாப்பு அறிறுவுத்தல்களுக்கு மத்தியில் இடம் பெறவுள்ளது.

தபால் மூல வாக்களிப்பில் எந்த இடத்திலும் எவ்வித குறைப்பாடும் காணப்பட்டதாக இது வரையில் அறிய முடியவில்லை. வாக்களிக்க வாக்களார்கள் தயாராகவே உள்ளார்கள். போட்டியிட எதிர் தரப்பினர் தயார் இல்லை என்பதை அவர்கள் வெளிப்படுத்திக் கொள்கிறார்கள். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தம்மைக் கைது செய்வதைத் தடுக்க கோரி ரிஷாத் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல்



தம்மைக்கைது செய்வதற்கு எடுக்கப்படும் முயற்சிகளைத் தடுத்து நிறுத்துமாறு கோரி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன், நேற்று உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

ஜனாதிபதி சட்டத்தரணிகளான பாயிஸ் முஸ்தபாவின் வழிகாட்டலில் அனுஜ பிரேமரத்ன ஊடாக இந்த அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அடிக்கடி மேற்கொள்ளப்படும் விசாரணைகளாலும், கைதுக்கான முயற்சிகளினாலும் தேர்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பெரும் சிக்கல்கள் தனக்கு ஏற்படுவதாகவும் அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் தலைவரென்ற வகையில், இன்றைய தேர்தல் சூழலில் பல வேலைப்பாடுகள் உள்ளன. அடிக்கடி என்னைக் கைது செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்படுவது, உள ரீதியாகத் என்னைச் சோர்வடைய வைத்துள்ளது. மேலும், தேர்தலுக்கு இன்னும் சில நாள்களே எஞ்சியுள்ளதால், பல கூட்டங்களிலும் பங்கேற்க வேண்டியுள்ளது.

இதற்கு முன்னரும் அடிக்கடி என்னை விசாரணைக்கு அழைத்தனர். கடைசியாகப் பத்து மணி நேரம் நான் விசாரிக்கப்பட்டேன். இவ்வாறான செயற்பாடுகளால் எனது பெயருக்கும் களங்கம் ஏற்படுத்தப் படுவதாகவே நான் உணர்கிறேன். எனவே, இந்தக் கைது முயற்சிகளைத் தடுத்து நிறுத்த உயர் நீதிமன்றம் உத்தரவிட வேண்டும்.- எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக வாணிபத்துறை அமைச்சராக இருந்த காலத்தில், கைத்தொழில் அபிவிருத்தி சபையூடாக கொலொஸஸ் நிறுவனத்திற்கு செப்பு விநியோகித்தமை பற்றி விசாரிக்கவே, குற்றப்புலனாய்வுப்பிரிவு இவரை அழைத்துள்ளதாகத் தெரிய வருகிறது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.07.2020 இல் வெளியிடப்பெற்றது.